06.01.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.257/2014

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | சாதி | |
| தபெ | வீராசாமி | மதம் | |
| கிராமம் | சோரப்பட்டு, | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 59/2023 |
| மாவட்டம் | பாண்டிச்சேரி | தேதி | |

( 06.01.2023 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் சோரப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எம்ஆர்எப் கம்பெனியில் வேலை செய்கிறேன். பாலையாவை எனக்கு தெரியும். அசா1, அசா.2 எனக்கு தெரியும். எதிர்கள் 1, 2,9 ஆகியோரை எனககு தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், இதர எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். இரவு 9.00மணியளவில் ஜனங்கள் ஓடினார்கள். நானும் ஓடினேன். ஆண்டிப்பாளையத்திற்கு முன்பு ஒரு ஆலமரத்திற்கு எதிரே ரோட்டிற்கு அருகில் பாலையா கழுத்தில் வெட்டுகாயத்துடன் இறந்துக்கிடந்தார். மறுநாள் பேப்பரில் பார்த்து 1,2,9 எதிரிகளும் மற்ற எதிரிகளும் சம்பவத்தில் ஈடுப்பட்டதாக நான் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எங்கள் ஊரை சேர்ந்த செல்வராஜன் மகன் அய்யனார் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீஸ் விசாரணையில் 8.9.2009 ந்தேதி மாலை 9.00மணிக்கு நான் கோவிலுக்கு சென்றேன் என்றும், அங்கு எங்கள் ஊரை சேர்ந்த மகேந்திரன், தமிழ்வாணன், சாந்தராஜ், மற்றும் பிரேம்குமார், பூபாலன், பாலமுருகன், மணிபாலன், அருள், அறிவழகன் ஆகியோர் அந்த கோவிலில் கும்பலாக இருந்தார்கள் என்றும், பாலையா இருக்கும் வரை நாம் அரசியல் செய்ய இயலாது என்றும், பாலையாவை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று எதிரி மகேந்திரன் சொல்லி விரைவில் காரியத்தை முடித்தால் ரூ-2,00,000/ தருவேன் என்றும், சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், இதனை கேட்டு நான் பயந்து வந்துவிட்டேன் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற உண்மைகளை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

06.01.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.257/2014

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துலட்சமி | சாதி | |
| க/பெ | சுப்பிரமணி | மதம் | |
| கிராமம் | சோரப்பட்டு, | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 70/2023 |
| மாவட்டம் | பாண்டிச்சேரி | தேதி | |

( 06.01.2023 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் சோரப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். வயது முதிர்வு காரணமாக நான் வீட்டில் இருக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாலையா எனக்கு தெரியும். அவரது மகன் மற்றும் மனைவியான அ.சா.1, அ.சா.2 ஆகியோரை எனக்கு தெரியும். பாலையாவுக்கு சொந்தமான நிலத்தில் விவசாய வேலைக்காக நான் சென்றேன். சம்பவத்தன்று மாலை நான் 4.00மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். பாலையா அந்த நிலத்தில் தான் இருந்தார். மறுநாள் காலையில் தான் அவர் இறந்துவிட்டதாக நான் தெரிந்துக்கொண்டேன், இந்த சம்பவம் நடந்து சுமார் 10,12 வருடம் இருக்கும். அவரை யாரோ கொலை செய்து ஆண்டிப்பாளைம் ஆலமரத்து அடியில் போட்டு இருப்பதாக சொன்னார்கள். நான் அவரது வீட்டிற்கு போனேன். அவரது சடலத்தை ஏற்கனவே மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். ஆஜர் எதிரி தமிழ்வாணன் எங்கள் ஊரை சேர்ந்தவர். அதனால் எனக்கு தெரியும். யார் எதற்காக கொலை செய்தார்கள் என்று

எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>** இல்லை என தெரிவிக்கப்பட்டது.